தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண். 134/ந/2022
நாள். 31.10.2022

திரு. T.விஜயகுமார்,
இராஜபாளையம். – முறையீட்டு மனுதாரர்.

ஆணையாளர்,
இராஜபாளையம் நகராட்சி. – எதிர் மனுதாரர்

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம், தர்மாபுரம் தெரு (முதல் தளம்), கதவு எண்.184 என்ற முகவரியில் வசிக்கும் திரு.T.விஜயகுமார் என்பவரின் 25.08.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 25.08.2022 அன்று பெறப்பட்டு 134/ந/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம், தர்மாபுரம் தெரு (முதல் தளம்), கதவு எண்.184 என்ற முகவரியில் வசிக்கும் திரு.T.விஜயகுமார் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

“எனது பாட்டனார் 1) அ.சோ.நாராயண நாடார் 2) தகப்பனார் தங்கமணி என்ற ராமமூர்த்தி நாடார் ஆகியோரால் இராஜபாளையம் நகராட்சிக்கு முனிசிபல் கமிஷனர் சுந்தரராஜலு நாயுடு என்பவருக்கு 30.03.1946 ஆம் தேதிய டாக்குமெண்ட் எண்.590/1946–ன்படி அயன் புன்செய் சர்வே 266 நம்பரில் செண்ட் 86–ல் வைத்திருக்கிற சமாதி இடம் செண்டு 7 போக மீதி உள்ள செண்டு 39½ யை ரூ 4937.80–க்கு கிரயம் செய்து கொடுக்கப்பட்டது.

ஆனால் தங்களது மூதாதையர் சமாதி கொண்ட 7 செண்ட் இடம் இராஜபாளையம் நகராட்சியால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு, பேருந்து நிலையமாக செயல்பட்டு வருகிறது. நகராட்சியால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட நிலத்தை வழங்கக் கோரி மனுதாராகிய நானும் மற்றும் 10 நபர்களால் ஸ்ரீ வில்லிப்புத்தூர் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் தொடரப்பட்ட மேல்முறையீடு வழக்கு எண். A.S.No.291/1996 ல் 21.10.1997 தேதியிட்ட தீர்ப்பில் எங்களுக்கு

சாதமாக வழங்கிய தீர்ப்பிற்கு எதிராக நகராட்சியால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண். S.A.No.791/1998 ல் 04.12.2012 நாளிட்ட தீர்ப்பும் எங்களுக்கு சாதகமாக வழங்கப்பட்டுள்ளது.

மேற்காணும் நீதிமன்ற உத்தரவின்படி இராஜபாளையம் பஸ் ஸ்டாண்டு காம்பவுண்டில் எங்கள் மூதாதையர் சமாதி இடம் 7 செண்ட் மட்டும் எங்களுக்கு ஒதுக்கீடு செய்து தருவதற்கு தேவையான உத்தரவினை ஆணையாளர், இராஜபாளையம் நகராட்சிக்கு பிறப்பிக்கும்படி பணிவுடன் பிரார்த்திக்கப்படுகிறது'' என தெரிவித்துள்ளார்.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 01.09.2022 நாளிட்ட கடிதம் மூலம் இராஜபாளையம் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

இராஜபாளையம் நகராட்சி ஆணையாளர் தனது 10.10.2022 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

“மனுதாரர் திரு.T.விஜயகுமார் என்பவர் தனது மனுவில் இராஜபாளையம் பழைய பேருந்து நிலையத்தில் உள்ள மூதாதையர் சமாதியும் அதைச் சார்ந்த 7 செண்ட் காலியிடத்தையும் நகராட்சி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாகவும், சென்னை உயர்நீதி மன்றம் வழக்கு எண். S.A.No.791/1998 தீர்ப்பின்படி, மேற்படி ஆக்கிரமிப்பு இடத்தை தங்களிடம் ஒப்படைக்கும்படி தெரிவித்துள்ளார். மனுவில் குறிப்பிட்டுள்ள இடம் சர்வே வார்டு F, பிளாக் எண்.8, நகரளவு எண்.3 ஆகும். மேற்படி இடம் சம்பந்தமாக மனுதாரர் மற்றும் 10 நபர்களால் ஸ்ரீ வில்லிப்புத்தூர் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண். O.SNo. 42/96 வழக்கில் 13.08.1996–ம் நாளிட்ட தீர்ப்புரையில் நகராட்சிக்கு சாதகமாக வழங்கப்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்பினை எதிர்த்து மனுதாரர்களால் தொடரப்பட்ட மேல்முறையீடு வழக்கு எண் A.S.No.291/1996 அனுமதிக்கப்பட்டு கீழமை நீதிமன்ற உத்தரவு ரத்து செய்யப்பட்டு நகராட்சிக்கு எதிராக 21.10.1997ல் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அதன் பேரில் மேல்முறையீட்டு வழக்கை எதிர்த்து நகராட்சியால் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் S.A.No.791/1998–ல் வழக்கு தொடரப்பட்டது. மேற்படி வழக்கில் 04.12.2012ம் தேதிய தீர்ப்பில் மனுதாரரின் மேல்முறையீட்டு தீர்ப்பு இரத்து செய்யப்பட்டு முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் வழக்கு எண். O.SNo. 42/96 ன் தீர்ப்பு உறுதி செய்யப்பட்டு நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட வழக்குகளின் தீர்ப்பின் அடிப்படையில் எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து சட்டக் கருத்துரு வழங்க கோரி நகர்மன்ற வழக்கறிஞருக்கு கடிதம் அனுப்பப்பட்டதில் நகர்மன்ற வழக்கறிஞர் சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக் கிளை வழக்கு எண். S.A.No.791/1998 ன் 04.12.2012ம் தேதிய தீர்ப்பு நகராட்சிக்கு சாதகமாக வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். அதன் அடிப்படையில் மனுதாரர் திரு.T.விஜயகுமார் என்பவருக்கு 12.07.2022ம் தேதி மேற்படி இடம் நகராட்சிக்கு சொந்தமானது என தெரிவித்து அறிவிப்பு அனுப்பப்பட்டது. மேலும் நகரளவு ஆவணங்களில் மேற்படி இடம் நகராட்சி பேருந்து நிலையம் என தாக்கலாகி உள்ளது. மேற்படி இடம் நகராட்சி கட்டுப்பாட்டில் உள்ள பேருந்து நிலையம் ஆகும். எனவே மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ளது போல் அன்னாருக்கு

பாத்தியப்பட்ட இடம் என்பதற்கு எவ்வித முகாந்திரமும் இல்லை என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் இராஜபாளையம் நகராட்சி ஆணையரும் 13.10.2022 அன்று தென்காசி முகாமில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 06.10.2022 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு. T. விஜயகுமார், 13.10.2022 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"இராஜபாளையம் பேருந்து நிலையத்தில் எங்களுக்கு சொந்தமான மூதாதையர் சமாதியும், 7 சென்ட் இடமும் இருந்து வந்தது. தற்போது, மேற்கண்ட சமாதி மற்றும் 7 சென்ட் இடத்தை இராஜபாளையம் நகராட்சியினர் ஆக்கிரமிப்பு செய்து கட்டடம் கட்டியுள்ளனர். இது தொடர்பாக மாவட்ட ஆட்சியருக்கும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநருக்கும் புகார் மனுக்கள் அனுப்பப்பட்டும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர் உரிய விசாரணை மேற்கொண்டு இராஜபாளையம் பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள எங்கள் மூதாதையர் சமாதி அமைந்துள்ள இடத்தையும், அதனுடன் அங்குள்ள 7 சென்ட் இடத்தையும் எங்களுக்கு திரும்ப கிடைக்கப்பெற ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எனது 24.8.2022 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரான இராஜபாளையம் நகராட்சி ஆணையாளர் திரு. சோ.பார்த்தசாரதி என்பவர் 13,10.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

''மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள இராஜபாளையம் பழைய பேருந்து நிலையத்தில் உள்ள மூதாதையர் சமாதியும், அதைச் சார்ந்த 7 சென்ட் காலியிடம் தொடர்பாக மனுதாரர் மற்றும் 10 பேரால் தொடரப்பட்ட மேல் முறையீட்டு வழக்கின் (A.S.No.291/96 நாள் 21.10.1997 நாளிட்ட தீர்ப்பை எதிர்த்து நகராட்சியால் சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் S.A. No. 791/1998ல் வழக்கு தொடரப்பட்டது. மேற்கண்ட வழக்கின் 4.12.2012 நாளிட்ட தீர்ப்பில் மனுதாரரின் மேல்முறையீட்டு தீர்ப்பு இரத்து செய்யப்பட்டு நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மனுதாரர் புகார் மனுவை அளித்ததைத் தொடர்ந்து அவருக்கு 12.7.2022 அன்று மேற்கண்ட இடம் நகராட்சிக்கு சொந்தமானது என தெரிவித்து மனுதாரருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நேர்வு தொடர்பாக முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் 13.8.1996 நாளிட்ட தீர்ப்பின் நகல், முதன்மை மாவட்ட நீதிமன்ற மேல்முறையீடு வழக்கு எண் 291/96 ன் மீதான 21.10.1997 நாளிட்ட தீர்ப்பின் நகல் ஆகியவற்றை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

மேலும் இம்முறை மன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்படும் எனது 10.10.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் விளக்கமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், இராஜபாளையம் நகராட்சி ஆணையரின் விளக்க அறிக்கை, வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையத்தைச் சார்ந்த மனுதாரர் திரு.T.விஜயகுமார் என்பவர் தனது முறையீட்டு மனுவில் இராஜபாளையம் பழைய பேருந்து நிலையத்தில் உள்ள தங்களது மூதாதையரின் சமாதி அமைந்துள்ள 7 செண்ட் இடத்தினை இராஜபாளையம் நகராட்சியால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதை திரும்ப ஒப்படைக்க உரிய ஆணையினை இராஜபாளையம் நகராட்சி ஆணையாளருக்கு வழங்கிட கோரியுள்ளார்.

இராஜபாளையம் பேருந்து நிலையத்திலுள்ள மூதாதையர் சமாதி உள்ள 7 செண்ட் நிலத்தை இராஜபாளையம் நகராட்சியால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக மனுதாரர் மற்றும் 10 நபர்களால் ஸ்ரீ வில்லிப்புத்தூர் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் (வழக்கு எண். OS No. 42/96) நாள் 13.8.1996ல் வழங்கிய தீர்ப்பில் மனுதாரரின் வழக்கினை தள்ளுபடி செய்து, இராஜபாளையம் நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் வழக்கு எண். OS No. 42/96, நாள் 13.8.1996ல் நகராட்சிக்கு சாதகமாக வழங்கிய தீர்ப்பினை எதிர்த்து மனுதாரர் மற்றும் 10 நபர்களால் ஸ்ரீ வில்லிப்புத்தூர் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் தொடரப்பட்ட மேல்முறையீடு வழக்கில் (வழக்கு எண் A.S.No.291/96, நாள் 21.10.1997ல் வழங்கிய தீர்ப்பில் மனுதாரரின் மேல்முறையீட்டினை அனுமதித்து, நகராட்சிக்கு எதிராக கீழமை நீதிமன்ற உத்தரவினை (OS No. 42/96, நாள் 13.8.1996) இரத்து செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டது.

நகராட்சிக்கு எதிராக வழங்கிய A.S.No. 291/1996 நாள் 21.10.1997 எதிர்த்து இராஜபாளையம் நகராட்சியால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தொடரப்பட்ட வழக்கில் ( வழக்கு எண். S.A. No. 791/1998) 04.12.2021 நாளிட்ட தீர்ப்புரையில் ஸ்ரீவில்லிப்புத்தூர் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தால் மனுதாரருக்கு சாதகமாக வழங்கிய மேல்முறையீட்டு வழக்கு எண்.A.S. No. 291/1996, நாள் 21.10.1997ல் வழங்கிய தீர்ப்புரையை இரத்து செய்து, முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற வழக்கு எண். OS No. 42/1996, நாள் 13.8.1996ல் இராஜபாளையம் நகராட்சிக்கு சாதகமாக வழங்கிய தீர்ப்பினையே உறுதி செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை வழக்கு எண்.791/1998 நாள் 04.12.2021–ல் வழங்கிய தீர்ப்புரை மூலம் மனுதாரர் கோரும் இடமானது இராஜபாளையம் நகராட்சிக்கு சொந்தமானது என அறிய முடிகிறது.

மேலும் இராஜபாளையம் நகராட்சி சர்வே பதிவேடுகளின்படி சர்வே வார்டு F – பிளாக் 8, நகரளவு எண் 3 இடமானது நகராட்சி பேருந்து நிலையம் என தாக்கலாகி உள்ளது என்பதை ஆவணங்களின் மூலம் தெரிய வருகிறது.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை A.S.No. 791/1998 நாள் 04.12.2012–ல் ஆணை பிறப்பித்துள்ள நிலையில், இராஜபாளையம் நகராட்சி ஆணையாளரின் அறிக்கையினை ஏற்று இம்மனு மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2022 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
1) திரு. T. விஜயகுமார்,
எண்.184, தர்மாபுரம் தெரு (முதல் மாடி),
இராஜபாளையம் 626 117, விருதுநகர் மாவட்டம்.

2) ஆணையாளர், இராஜபாளையம் நகராட்சி,
விருதுநகர் மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரியிடப்பட்ட உரையில்)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

செயலாளர்

01/11/22